بسم الله الرحمن الرحيم

**Friday Sermon / வெள்ளிக்கிழமை குத்து.ஃபா 07/10/2016**

**(05 Muharram 1438 HIJRI)**

# "THE PURIFIED HEART"

# "தூய இதயம்"



**Hazrat Khalifathullah Munir Ahmad Azim (A)**

உலக மக்களுக்கு சலாம் தெரியப்படுத்திய பிறகு தஷஹ்ஹுதும் தஅவுசும் சூரா அல்பாத்திஹாவும் ஓதியப்பிறகு இவ்வாறு தாம் உரையினை ஆரம்பித்தார்.

அந்நாளில் செல்லவமும், பிள்ளைகளும் (யாதொரு) பயனுமளிக்கமாட்டார். எவரொருவர் பரிசுத்த இதயத்தை அல்லாஹ்விடம் கொண்டு வருகின்றாரோ அவர் (கண்ணியம் அடைவார்) (26-89-90)

விதி நாளில் மனிதனுக்கு பயனளிப்பது, அவனது தூய இதய மட்டுமாகயிருக்கும். தூய இதயம் என்பதன் பொருள், இறைவனும் அவனது நபிமார்களும் கற்பித்த பாடங்களுக்கு ஏற்றவார் நம்பிக்கை கொள்ளும் இதயம். அவ்வகை இதயம் அனைத்து விதமான அழுக்குகளிலிருந்தும் பாதுக்காப்பினைப் பெற்றிருக்கும். நான் உங்களிடம் கூறிக் கொள்வதைப் போன்று "கட்டுப்படாமலிருக்கல்" உட்பட மற்றனைத்து வகையான அழுக்குகளிலிருந்தும் அது தூய்மையாகயிருக்கும். ஆனால் இறை அச்சத்தால் இதயத்தை எழுப்பிக் கொண்டால் இந்த வசீகரணத்தை தடுத்துக் கொள்ள முடிந்து விடும். ஆனால் அவ்வகையிலான பய பக்தியில்லாத மனிதனின் இதயம் அழிவில் அகப்பட்டு விடவும் தன்னைப் படைத்தவனை மறுத்துக் கொள்ள அவரை ஆளாக்கிக் கொள்ளவும் செய்யும்.

தூய தூதர் (ஸல்) “அவர்கள் கூறினார். **“கயற்றால் கோர்க்கப்பட்ட விரிப்பினைப் போன்று ஆசைகள் மனித இதயங்களில் கோர்க்கப்படுகின்றது. எந்த ஓர் இதயம் அவையை ஏற்றுக் கொள்கின்றதோ அந்த இதயத்தில் ஒரு கறுப்புப் புள்ளி உருவாகின்றது. ஆனால் எந்த ஓர் இதயம் அவையை நிராகரித்துக் கொள்கின்றதோ அந்த இதயத்தில் ஒரு வெள்ளைப் புள்ளி உருவாகின்றது. அதன் பலனாக இரண்டு வகையான இதயங்கள் தோன்றுகின்றது. ஒன்று வெள்ளை நிறம் கொண்டதும், வெள்ளைக் கல்லைப் போன்றுதும். அந்த இதயத்தில், ஆகாயவும் பூமியும் நிலை நிற்கும் காலம் வரையில் எவ்வகையான குழப்பமோ அல்லது ஆசையோ பாதிப்பதில்லை. இரண்டாவது இதயம் கருப்பு நிறம் கொண்டதும் தூசு நிறைந்ததுமான ஒரு பாத்திரத்தைப் போன்று. அது நல்லவையினை ஒன்றும் ஏற்றுக் கொள்வதில்லை. அதாவது வெறுப்பினை தூண்டிக் கொள்ளும் எதையும் அது நிராகரித்துக் கொள்வதும்மில்லை. மாறாக ஆசைகளால் நிறைந்திருக்கும்’** (மூஸ்லீம்)

இவ்வுலக ஆசைகளுக்கும் வஞ்சனைகளுக்கும் எதிராக, ஐய்யமின்றி ஒரு போரட்டம் தங்கள் வாழ்கை வழியில் மனிதர்கள் கண்டிபாக நடத்த வேண்டியதாகயிருக்கும். இந்த லட்சியத்தை அடைய அவர்கள் பிரார்த்தனைகள் வழி சுயம் ஆற்றல் பெற்றுக் கொள்ள வேண்டும். மனிதனை வழி தவறச் செய்யவும் அழித்துக் விடவும் அவரின் இதயத்தில் விஷம் குத்தி வைத்துக் கொள்ளவும் சாத்தான் எப்பொழுதும் முயற்சிகளை மேற் கொண்டு வருவான்.

இறை எண்ணத்தை கை விட்டு விடுகின்ற மனதில் சாத்தான் குடிக் கொள்கின்றான். அங்கு சாத்தான் அதிகாரம் கையாளுகின்றான். தீய போதனைகள் வழங்குகின்றான். ஆனால் இறை எண்ணத்தின் பால் அந்நபர் திரும்பிக் கொண்டால் சாத்தான் அவமானத்துடன் வெளியேறுகின்றான். இதயம் இரண்டு வகையான போதனைகளை கொண்டதாகும் என்ற உண்மையினை நாம் ஒரு பொழுதும் மறந்து விடக் கூடாது. ஒன்று நாம் முதலில் கூறியதைப் போன்று சாத்தானிலிருந்து வருகின்ற சிந்தனைகள். அது இறைவனுக்குக் கட்டுப்படாமல் இருப்பதற்கான ஆசையினை ஏற்படுத்திக் கொண்டிருக்கும். ஹராமாக்கப்பட்ட விஷயங்களையும் விருப்பங்களையும் செய்து திருப்தியடைவதற்கு தூண்டிக் கொண்டிருக்கும். இறைவன் ஒரு மலக்கை ஒவ்வொரு மனிதர்களிடமும் வைத்திருக்கின்றான். அது ஒவ்வொரு மனிதனையும் நன்மை செய்வதற்கு தூண்டிக் கொண்டிருக்கும்.

**தூய தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்”. இரண்டு வகையான போதனங்கள் (அதாவது தூண்டுதல்கள்) இதயத்தில் எழுப்பிக் கொண்டிருக்கும். அதில் ஒன்று மலக்கில் இருந்தாகும். அது நன்மைச் செய்வதற்கு தூண்டிக் கொண்டிருக்கும் உண்மையினை ஏற்றுக் கொள்வதற்கான எண்ணத்திற்கு ஆற்றல் வழங்கிக் கொண்டிருக்கும். இது அனுபவிக்கின்றோர்கள் புரிந்துக் கொள்ளுங்கள் இது அல்லாஹ்விலிருந்துள்ள வையாகும் என்பதை. அவர் அல்லாஹ்விற்கு நன்றி செலுத்தட்டும்! இரண்டாவது வருவது, பகைவனிலிருந்து. அது தீமையைச் செய்யத் தூண்டும் உண்மையினை மறுத்துக் கொள்ளவும் நன்மையிலிருந்து மனிதனை வழி குலைத்துக் கொள்ளவும் செய்யும். இது அனுபவிக்கின்றோர்கள் சாபத்திற்குரிய சாத்தானின் வலையிலிருந்து இரட்சிப்பிற்காக இறைவனிடம் மன்றாட வேண்டும்** (திர்மிதி). இந்த உரையினை முடித்துக்

கொள்வதற்கு முன் இவ்விஷயத்தைக் குறித்த சில குர் ஆன் வசனங்களும் திரு நபி மொழிகளும் கேட்பிக்கின்றேன்.

திரு குர் ஆன்

**“இத்தகையோர் பகிரங்கமான வழி கேட்டில் இருக்கின்றார்கள்” (39-23)**

**“எவர் தன்னுடைய இச்சையைத் தன்னுடைய தெய்வமாக ஆக்கிக் கொண்டானோ அவனை நீர்பார்த்தீரோ! மேலும் அறிந்தே அல்லாஹ் அவனை வழிகேட்டில் விட்டு அவனுடைய காதுகள் மீதும் இதயத்தின் மீதும் முத்திரையிட்டு இன்னும் அவனுடைய பார்வை மீதும் திரையை அமைத்து விட்டான். எனவே பிறகு அவனுக்கு நேர் வழி காண்பிப்பவர் யார்! நீங்கள் சிந்தித்து உணர வேண்டுமா!** ( 45-24)

**அவர்கள் தாம் ஈமான் கொண்டவர்கள். மேலும் அல்லாஹ்வை நினைவு கூறுவதால் அவர்களுடைய இதயங்கள் அமைதி பெறுகின்றன (13-29)**

திரு நபி மொழி

**“ஆதம் மக்களின் இதயத்தில் சாத்தான் (வீணான ஆசைகளும் வஞ்சனைகளும்) திரையிடாமலிருந்தால் அவர்கள் சொர்க்கத்தில் நுழைந்திருப்பார்கள்”(அஹ்மது)**

**“மனிதர்களுக்கு ஒரு மாம்சதுண்டு இருக்கின்றது அது நன்றாகயிருந்தால் உடல் முழுவதும் நன்றாகயிருக்கும். அது தீயதாகயயிருந்தால் உடல் முழுவதும் தீயதாகயிருக்கும் புரிந்துக் கொள்ளுங்கள் அந்த மாம்சத் துண்டு இதயம் ஆகின்றது”** (புகாரி)

பௌதீகமும் ஆன்மீகவுமான எல்லா விதமான நோய்களிலிருந்தும் அல்லாஹ் நம் இதயத்தை பாதுகாக்கட்டும்! புரிந்துக் கொள்ள வேண்டும், இதயத்தின் ஆன்மீக மரணம் என்பது மற்றெந்நத நோயினைவிடவும் கொளரவம் வாய்ந்ததாகும். ஆகவே பிரார்த்தனைகள் வழியும், பொறுமை வழியும் நமக்கு நம் இதயத்தை நன்குப்படுத்துவதற்கான கடின முயற்சியை மேற் கொள்வோம். அது எவ்வித விடுவையும் ஏற்படுத்தாமல் இருக்கட்டும். இன்ஷா அல்லாஹ். ஆமீன்.

**Issued by:**

**Jamaat Ul sahih Al Islam Dawa Department**

**Tamil Nadu, India (Regd. No. A/693)**

**Web: www.jamaat-ul-sahih-al-islam.com**

**Translated by:**

**Azim Ahmad**

**E-mail: azimahmad070@gmail.com**

**Cell: 9789180817, 9947181650**